### வேங்கைவயல் விவகாரத்தில்

# இனியும் போராட்டம் நடத்தத் தேவையில்லை!

## மதுரை உயர்நீதிமன்றக் கிளை அறிவித்து - தீர்ப்புக்காக வழக்கை ஒத்தி வைத்தது!

மதுரை, ஜன. 31 -

வேங்கைவயல் விவகாரத்தில் உண்மை குற்றவாளிகளை கண்டுபிடிக்க போராட்டம் நடத்த அனுமதி கோரி தாக்கல் செய்த மனு தொடர்பாக, வேங்கை வயல் விவாகரத்தில் நீதிமன்றங்களை அரசியல் மேடையாக்க முயற்சிக்க வேண்டாம் என்று மதுரை உயர்நீதிமன்ற நீதிபதி கடுமையாக கருத்து தெரிவித்துள்ளார்.

அரசு தரப்பில் அறிவியல் பூர்வமான விசாரணை நடத்தப்பட்டு உரிய அறிவியல் (எலக்ட்ரானிக்) ஆதாரங்களுடன் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டபோது எதிர்ப்புக்கு ஏதோ ஒரு நோக்கம் இருக்க வேண்டும் என்று நீதிபதி கருத்து கறியுள்ளார்.

இந்த வழக்கில் உரிய உத்தரவு பிறப்பிக்க தீர்ப்புக்காக வழக்கை ஒத்திவைத்து உயர் நீதிமன்ற மதுரை கிளை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் ஏனோ தானோ என்று குற்றவாளிகளை முடிவு செய்யவில்லை அறிவியல் பூர்வமாக ஆய்வு செய்து பறிமுதல் செய்யப்பட்ட ஆவணங்கள் முழுமையாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு அதன் பின்னரே குற்றவாளிகள் முடிவு செய்யப்பட்டுள்ளது என்று தலைமை குற்றவியல் வழக்கறிஞர் ஹசன் முகமது ஜின்னா வாதிட்டுள்ளார்.

திருமங்கலத்தை சேர்ந்த கண்ணன் என்பவர் மதுரை அமர்வில் மனுவினைத் தாக்கல் செய்திருந்தார். அதில், "கடந்த 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் தேதி புதுக்கோட்டை மாவட்டம் வேங்கைவயல் கிராமத்தில் உள்ள மேல் நிலை குடிநீர் தொட்டியில் மனித கழிவு கலக்கப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த சம்பவம் தொடர்பாக சிபிசிஐடி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரிக்கின்றனர். ஆனால் விசாரணையில் எந்த முன்னேற்றமும் இல்லை. இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை.

இந்த சம்பவத்தில் ஈடுபட்டவர்களை உடனடியாக கைது செய்து தீவிர நடவடிக்கை எடுக்க கோரிஆர்ப்பாட்டம் நடத்த அனுமதி வழங்கி உத்தரவிட வேண்டும்" எனக் கூறியிருந்தார். இந்த வழக்கு நீதிபதி நிர்மல் குமார் முன்பாக நேற்று விசாரணைக்கு வந்தது.

மனுதாரர் தரப்பில் போராட்டம் நடத்த அனுமதிக்கோரிய மனுவை திரும்பப் பெறுவதாக நேற்று முன்தினம் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று வழக்கை தொடர்ந்து நடத்துவதாக தெரிவிக்கப்பட்டது.

அதற்கு நீதிபதி, இந்த விவகாரம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் குற்றப்பத்திரிக்கையை ரத்து செய்யக் கோரியும் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மாற்றி மாற்றி பேச என்ன காரணம்? என கேள்வி எழுப்பினார்.

அப்போது மனுதாரர் தரப்பில், "பாதிக்கப்பட்ட மக்களே குற்றவாளிகளாக அடையாளப்படுத்தப் பட்டுள்ளனர். குற்றம் சாட்டப்பட்டவர்கள் உண்மையான குற்றவாளிகள் அல்ல. ஆகவே உண்மையான குற்றவாளிகளை கண்டறியக் கோரி ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதிக்க வேண்டும்" என தெரிவிக்கப்பட்டது.

மேலும் அரசு குற்றவாளிகளாக சேர்க்கப்பட்டுள்ள நபர்கள் குற்றவாளிகள் இல்லை என்றும் தங்களை தூக்கிலிடுங்கள் என தெரிவிக்கின்றனர் எனவே போராட்டம் நடத்த அனுமதிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. அப்பொழுது நீதிபதி ஏற்கனவே பல போராட்டங்கள் நடத்தப் பட்டுள்ளன.

இந்த வழக்கில் சம்பவத்தன்று காலை 7:30 முதல் 9:30 மணிக்குள் நடந்த விஷயங்கள் என்ன நடந்தது என்பது பற்றிய அனைத்து மின்னணு பதிவுகளையும் அறிவியல் பதிவுகளையும் நேற்று அரசு தரப்பில் ஆஜரான தலைமை குற்றவியல் வழக்கறிஞர் தெளிவாக பதிவு செய்துள்ளார் மேலும் மொபைல் பதிவுகளில் உள்ளது. எதிர்ப்புக்கு ஏதோ ஒரு நோக்கம் இருக்க வேண்டும்.

எனவே நீதிமன்றத்தை அரசியல் மேடையாக ஆக்க முயற்சிக்க வேண்டாம் என்று கோபமாக குறிப்பிட்டார். அப்பொழுது அரசு தரப்பில் தலைமை குற்றவியல் வழக்கறிஞர் ஹசன் முகமது ஜின்னா ஆஜராகி. இந்த வழக்கை பொறுத்தவரை ஏனோ தானோ என்று குற்றவாளிகளை முடிவு செய்யவில்லை அறிவியல் பூர்வமாக ஆய்வு செய்து பறிமுதல் செய்யப்பட்ட ஆவணங்கள் முழுமையாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு அதன் பின்னரே குற்றவாளிகள் முடிவு செய்யப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட நபர்கள் குற்றவாளிகள் இல்லை என்பதை மனுதாரர் தரப்பில் விசாரணை நீதிமன்றத்தில் உரிய ஆதாரங்களை சமர்ப்பித்து வழக்கை நடத்தலாம் என தெரிவித்தார்.

இதையடுத்து நீதிபதி முறையான விசாரணை நடத்தப்பட்டு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவே இனி போராட்டம் நடத்துவது தேவையற்றது எனக் கூறி வழக்கை தீர்ப்புக்காக தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைத்தார்.

### இந்திய மருத்துவமனைகளை நாடி வரும்

# வெளிநாட்டு நோயாளிகளுக்கு விமான நிலையங்களில் வசதிகள்!

## ஒன்றிய அமைச்சருக்கு – கலாநிதி வீராசாமி எம்.பி. கடிதம்!

சென்னை, ஜன. 31 -

வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி , இ-விசா பெற்று இந்தியா மருத்துவமனைகளை நாடிவரும் வெளிநாட்டு நோயாளிகளுக்காக தனி வரிசையை, இந்திய விமான நிலையங்களில் அமைத்திடக் கோரி, ஒன்றிய அமைச்சருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி , ஒன்றிய விமான போக்குவரத்து துறை அமைச்சர் கிஞ்சரப்பு இராம் மோகன் நாயுடு அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில், இந்தியாவில் சென்னை போன்ற பெரு நகரங்களில் அமைந்துள்ள மருத்துவ மனைகளில், சிகிச்சை பெறுவதற்காக தற்போது புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள மெடிக்கல் இ-விசா திட்டத்தின் கீழ் வரும் நோயாளிகளை வரவேற்று, அவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்கிடும் வகையில், சென்னை உள்ளிட்ட பெருநகரங்களில் அமைந்துள்ள விமான நிலையங்களில் ஒரு தனி பிரிவை



(counter) உருவாக்கியும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

இவ்வாறு செய்வதன் மூலம், மெடிக்கல் இ-விசா பெற்று வரும் நோயாளிகள், எவ்வித சிரமமும் இன்றி தாங்கள் செல்ல வேண்டிய மருத்துவமனைகளுக்கு விரைவில் சென்று சேர்ந்து, சிகிச்சை பெற முடியும். மேலும், இவர்களுக்கு சிகிச்சை வழங்கும் மருத்துவ மனைகளும் பயன் பெறும். இதன் மூலம், இந்தியாவிற்கு வரும் மெடிக்கல் டூர் என்னும் முறையின் கீழ் வரும் வெளிநாட்டு பயணிகளின் எண்ணிக்கையும் உயரும்,

சென்னை போன்ற நகரங்களில் அமைந்துள்ள சர்வதேச விமான நிலையங்களில், சுமார் 1000 சதுர அடி இடம் ஒதுக்கப்பட்டு, மருத்துவர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்களை அங்கு பணியமறுத்தி, மருத்துவர் இ-விசா பெற்று வரும் நோயாளிகளுக்கு ஒரு உதவி மையம் அமைக்கலாம், சம்பந்தப்பட்ட மாநில அரசாங்கத்தின் மூலம் இவர்களை பணியமர்த்தலாம், இவ்வாறு செய்வதன் மூலம், இந்தியாவிற்கு வரும் மெடிக்கல் டூர் பயணிகளின் எண்ணிக்கை உயர்வதுடன், நம் நாட்டிற்கு அந்நிய செலவிணியும் கூடுதலாக வரும்.

எனவே, ஒன்றிய விமான போக்குவரத்து துறை அமைச்சர் , உடனடியாக தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

இவ்வாறு டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. அக்கடிதத்தில் கூறியுள்ளார்.

### மூளைச்சாவு உறுப்புக் கொடை திட்டம்!

# இந்திய அளவில் தமிழ்நாடு மாபெரும் சாதனை!

## 'தானம் செய்தோரின் உடலுக்கு அரசு மரியாதை' எனும் முதல்வரின் அறிவிப்பே காரணம்!

சென்னை, ஜன.31-

தமிழ்நாட்டின் மூளைச்சாவு நபர்களின் உறுப்புக்கொடை என்ற உன்னதத் திட்டம் 2024-ஆம் ஆண்டு ஒரு புதிய உச்சத்தை எட்டியுள்ளது.

கடந்த ஓராண்டில் (2024) மட்டும் 268 மூளைச்சாவு ஏற்பட்ட நபர்கள் உறுப்புக் கொடை அளித்துள்ளனர். அவர்களிடமிருந்து 1,500 உறுப்புகள் மற்றும் திசுக்கள் கொடையாகப் பெறப்பட்டு தேவையான நோயாளிகளுக்கு பொருத்தப் பட்டுள்ளன.

மூளைச்சாவு உறுப்புக் கொடைத்திட்டம் தொடங்கப்பட்டது முதல், இந்திய அளவில், ஓராண்டில், ஒரு மாநிலத்தில் மட்டுமே இந்த அளவுக் கொடை இது வரையில் நிகழ்ந்ததில்லை. இம்மாபெரும் சாதனை சாத்தியமானதற்கான காரணம்,




நம்முடைய முதல்வர் அவர்களின் "உடல் உறுப்பு தானம் செய்தோரின் திருவுடல்களுக்கு அரசு மரியாதை செய்யப்படும்" எனும் உன்னதமான வரலாற்று சிறப்பு மிக்க 'அரசு ஆணையே' ஆகும்.



அரியலூர் மாவட்டம் செயங்கொண்டத்தில் அலைகடல் வெற்றிகொண்டான் அவர்களின் 14 ஆம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு தலைமைக் கழக வழக்கறிஞர் சூர்யா வெற்றிகொண்டான், ஜெயங்கொண்டம் நகர செயலாளர் வெ.கொ.கருணாநிதி அவர்களது இல்லத்தில் அய்யா வெற்றிகொண்டான் அவர்களது திருவுருவப் படத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செலுத்தினார்.உடன் இராஜாமணி வெற்றிகொண்டான், ஒன்றிய செயலாளர் தனசேகர், நகர செயலாளர், நகர் மன்ற துணைத் தலைவர் வெ.கொ.கருணாநிதி, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டு மரியாதை செலுத்தினர்.

### தாம்பரம் மாநகர வர்த்தகர் அணி துணை அமைப்பாளர்

# இரா.செல்வகுமார் சகோதரர் ஆர்.சுந்தரம் மறைவு!

## டி.காமராஜ் – கழகத்தினர் அஞ்சலி செலுத்தினர்!

சென்னை, ஜன. 31 -

தாம்பரம் மாநகர வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் முன்னாள் நகர மன்ற உறுப்பினர் இரா. செல்வகுமாரின் மூத்த சகோதரரும் மாநகர தொழிலாளர் அணி துணை அமைப்பாளருமான எஸ். மகேஷின் தந்தையுமான கே.எஸ். ராமையா ஆர். தனம்மாள் அவர்களின் மூத்த மகன் கழகத்தின் மூத்த முன்னோடியுமான ஆர்.சுந்தரம் (வயது 75) 28.01.2025 அன்று இரவு 8.30 மணியளவில் உடல் நல குறைவால் மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டு சிகிச்சை பலனின்றி இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்து தாம்பரம் 4 வது மண்டல குழுத்தலைவரும் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ், மாமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.கோபி, பி.ஜோதி குமார், பகுதி கழக செயலாளர் ஜா.ரவிக்குமார், வட்ட கழக செயலாளர்கள் ஆர். ஜீவன், எம்.வினோத், பகுதிப் பிரதிநிதி மா.கன்னியப்பன், ஆர்.சஞ்சீவி, என். ஷாஜகான், சித்திரம், மண்ராஜன், கல்யாணி, வாசுதேவன், தங்கராஜ், மங்களபுரம் பாபு, ஆர். தேவராஜ், தலைமை கழக பேச்சாளர்கள் பி.வி. ஏகாம்பரம், செ.ஜின்னாபாய், மைகல், டி.கே. தாமஸ், பி.காளியப்பன், விக்கி என்கிற யுவராஜ், சுகுமார், டைலர் ராமு மற்றும் கழக தோழர்கள், பொதுமக்கள் அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.


அன்னாரது இறுதிச் சடங்கு நேற்று முன்தினம் (29.1.2025) மாலை மேற்கு தாம்பரம் ரங்கநாதபுரத்தில் அன்னாரின் இல்லத்தில் இருந்து புறப்பட்டு திருநீர்மலை சாலையில் உள்ள கடபேரி மின் மயானத்தில் உடல் தகனம் செய்யப்பட்டது.

### கழகத் தொண்டர் அணி செயலாளர்

# மாஸ்டர் பெ.சேகர் துணைவியார் சகோதரி லோகநாயகி மறைவு !

## கழகத்தினர் அஞ்சலி !

சென்னை, ஜன. 31-



கழக மாநில தொண்டர் அணிச் செயலாளர் மாஸ்டர் பெ.சேகர் அவர்களின் துணைவியார் சகோதரி லோகநாயகி அவர்கள் நேற்று முன்தினம் உடல் நலக் குறைவால் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின் மறைவு செய்தி அறிந்து கழகத்தினர் அவரது உடலுக்கு மலர் மாலைகள் அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் நேற்று அவ்வை சண்முகம் சாலை லாயிட்ஸ் ரோடு பி.எம். தர்கா அருகில் இருந்து புறப்பட்டு மயிலாப்பூரில் உள்ள இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டது.



சென்னையில் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற அறங்காவல் குழு, ஆட்சிக் குழு, பொதுக் குழு கூட்டத்தில் பங்கேற்ற கழகத்தின் தலைவர் முன்னாள் துணை வேந்தர் ம.இராசேந்திரன், அறங்காவல் குழுத் தலைவர், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம், அறங்காவல் குழு உறுப்பினர் நல்லி குப்புசாமி ஆகியோர் உள்ளனர்.

### தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் – முன்னாள் துணைவேந்தர் ம.இராசேந்திரன் முன்னிலையில்

# தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் இணையதளம்! 50 சதவிகித தள்ளுபடியில் நூல்கள் விற்பனை!

## ஒன்றிய முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜன. 31-

அறங்காவல் குழுவின் தலைவர் மேனாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம் தலைமையிலும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் மேனாள் துணை வேந்தர் ம. இராசேந்திரன் முன்னிலையிலும் கூடிய. தமிழ் வளர்ச்சிக் கழகக் குழுக் கூட்டம் தமிழ்க் கலைக்களஞ்சியங்கள் போன்ற 60 க்கும் மேற்பட்ட தமிழ் நூல்களை 50 சதவிகிதம் தள்ளுபடியில் விற்க முடிவு செய்துள்ளது. மேலும் . தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் இணைய தளத்தை ப. சிதம்பரம் தொடங்கி வைத்தார்.

இந்திய மொழிகளிலேயே தமிழுக்குத்தான் முதன் முதலில் கலைக்களஞ்சியம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தியா விடுதலை அடைவதற்கும் முன்பாகவே 1946 ஆம் ஆண்டிலேயே தொடங்கப்பட்டத் தமிழ் வளர்ச்சிக்கழகம் 1954 முதல் தொகுதியையும் 1968 இல் 10 ஆவது தொகுதியையும் வெளியிட்டிருக்கிறது. அதன் பின் குழந்தைகள் கலைக்களஞ்சியம், மருத்துவக் களஞ்சியம், சித்த மருத்துவக் களஞ்சியம் என்று 60க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளது.

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பணிகள் முனைப்புடன் செயற்படவும் வரும் ஆண்டில் தமிழ் வளர்ச்சிக்கழகம் மேற்கொள்ள இருக்கும் பணித் திட்டங்கள் குறித்தும் முடிவு செய்ய, தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் அறங்காவல் குழு, ஆட்சிக் குழு, பொதுக் குழு ஆகியவற்றின் சிறப்புக் கூட்டம் சென்னைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது., செய்ய வேண்டிய பணிகள் குறித்துத் திட்டமிடவும் செயற்படுத்தவும் உறுப்பினர்களின் கருத்துகள் கேட்டறியப்பட்டன. அறங்காவல் தலைவர் ப.சிதம்பரம் உரிய பரிந்துரைகள் வழங்கினார்.

சென்னைப் பல்கலைக்கழகப் பதிவாளர் ஏழுமலை, நல்லி குப்புசாமி,, கிருஷ்ண சந்த் சோர்டியா, தமிழ்நாடு அறக்கட்டளைத் தலைவர் இராசரெத்தினம் இ.ஆ.ப. (ஒய்வு), எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணன், வ. ஜெயதேவன், நல்லூர் சரவணன், சாரதா நம்பி ஆரூரன், உலகநாயகி பழனி, அர்த்தநாரீசுவரன் .ரா.சுப்பிரமணியன்,, செம்மொழி நிறுவன இயக்குநர் சந்திர சேகரன், ஒப்பிலா மதிவாணன், சேயோ ன், திருப்பூர் கிருஷ்ணன், மருத்துவர் கல்யாணசுந்தரம், மேனாள் துணைவேந்தர் காளிராஜ், மணிமேகலை கண்ணன், வாசுகி கண்ணப்பன், நெல்லை சு.முத்து, வழக்கறிஞர் சந்திர மோகன், ஆகியோர் கலந்து கொண்டனர்.



சமத்துவ சமுதாயம் படைக்க வழிகாட்டிய கௌதம புத்தரின் வரலாற்றினை 'புத்த காவியம்' எனும் பெயரில் கவிஞர் தணிகை மணியன் கவிதை வடிவில் எழுதிய நூல் வெளியீட்டு விழா, 27.01.2025 அன்று சென்னை அசோக் நகரில் உள்ள விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. திருமதி டி. கே.விஜயலட்சுமி சுப்பிரமணியம் வரவேற்புரை ஆற்றினார். விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன், எம்.பி. "புத்த காவியம் நூலினை வெளியிட கழக துணை அமைப்புச் செயலாளர் திரு.வி.க. நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி நூலினை பெற்றுக்கொண்டார்.

### கவிஞர் தணிகை மணியன் எழுதிய

# 'புத்த காவியம்' நூல் வெளியீட்டு விழா!

## தொல்.திருமாவளவன் எம்.பி. வெளியிட – ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., பெற்றுக்கொண்டார்!

சென்னை,ஜன.31–

தமிழ்நாடு அரசு துணை இயக்குநர் எழுது பொருள் அச்சுத்துறையில் துணை இயக்குநராக பணியாற்றி ஓய்வு பெற்ற சுப்பிரமணியம் என்கிற கவிஞர் தணிகை மணியன் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது.

சமத்துவ சமுதாயம் படைக்க வழிகாட்டிய கௌதம புத்தரின் வரலாற்றினை 'புத்த காவியம்' எனும் பெயரில் கவிஞர் தணிகை மணியன் கவிதை வடிவில் எழுதிய நூல் வெளியீட்டு விழா, 27.01.2025 அன்று திங்கள்கிழமை, காலை 10.00 மணியளவில் சென்னை அசோக் நகரில் உள்ள விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

திருமதி டி.கே.விஜயலட்சுமி சுப்பிரமணியம் வரவேற்புரை ஆற்றினார்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன், எம்.பி., "புத்த காவியம்"–நூலினை வெளியிட கழக துணை அமைப்பு செயலாளர் திரு. வி.க. நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி நூலினை பெற்றுக்கொண்டார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.கே.மகேந்திரன் அகில இந்திய ஓய்வூதிய சங்கத்தின் உதவிப் பொதுச்செயலாளர் கே.கோவிந்தராஜ், ஓய்வூதியர் சங்க மாநிலப் பொருளாளர் என்.பஞ்சாட்சரம், ஓய்வூதியர் சங்க மாநில தலைவர் குப்பன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

தமிழ்நாடு அரசு துணை இயக்குநர் எழுது பொருள் அச்சுத்துறையில் துணை இயக்குநராக பணியாற்றி ஓய்வு பெற்ற சுப்பிரமணியம் என்கிற கவிஞர் தணிகை மணியன் ஏற்புரை வரங்கினார். வழக்கறிஞர் எஸ்.மணி மொழி நன்றியுரை ஆற்றினார். இந்த நிகழ்ச்சியில் திருவிக நகர் தெற்கு பகுதி 76(அ)வட்ட செயலாளர் எஸ்.வெங்கடேசன், டேபிள் டென்னீஸ் பயிற்சியாளர் பி.எஸ்.என்.எல். ராஜேஷ், ஐடி.விங்.எஸ்.கௌதம் ஆகியோர் கலந்து கொண்டனர்.



கடலூர் வன்னியர் பாளையத்தில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து 17 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ரேஷன் கடை புதிதாக கட்டுவதற்கு அடிக்கல் நாட்டு விழாவில் கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ. தலைமை தாங்கி புதிய ரேஷன் கடை கட்டுவதற்கு அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். இதில் கூட்டுறவு சங்கத் தலைவர்கள் ஆதி பெருமாள், ரவிச்சந்திரன், அரசு ஒப்பந்ததாரர் ராஜசேகர், திராவிட கழகம் சிவகுமார், எழிலேந்தி, கலையரசன், அன்பழகன், கல்யாண மூர்த்தி, பாலசுப்ரமணியன், ராஜா, பாலசுந்தர், ராமசாமி, முருகன், ஜெகன், ராஜேஷ், குகன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.